


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.6.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.06.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.6.2025) சென்னையில் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினரும், தஞ்சாவூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான துரை. சந்திரசேகரன் சகோதரர் துரை. பாண்டியன் மகள் பா. தனுஸ்ரீ மற்றும் மன்னார்குடி நகர கழகச் செயலாளர் வீரா. கணேசன் சகோதரர் அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் வீரா. கதிரவன் மகன் வீ.க. வீரவிஜயன் ஆகியோரது திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்கள் குடும்பத்தினர் உள்ளனர்.

இ. கண்ணப்பன் ஏற்பாட்டில், கே. சிவசங்கரன்,பி. தரணி, பா சந்திரன் முன்னிலையில்

# மாதவரம் 16வது வட்ட நிர்வாகிகள் கூட்டம்!

## புழல் எம். நாராயணன் ஆலோசனைகள் வழங்கினார்!

மாதவரம், ஜூன்.28-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்ட திமுகழக நிர்வாகிகள் கூட்டத்தில் உறுப்பினர் சேர்த்தல் பணியை தீவிரமாக நிறைவேற்றி, கழகத் தலைவர், முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 2026 ஆம் ஆண்டு மீண்டும் திராவிட மாடல் ஆட்சி கொண்டுவர அயராவது பாடுபட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்ட நிர்வாகிகள் கூட்டம், ஆண்டார்குப்பம் செக் போஸ்ட் துவாரகா நகர் பகுதியில் வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

16வது வட்ட அவைத் தலைவர் இ.அருள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பகுதி துணை செயலாளர் கே. சிவ சங்கரன், மாவட்ட பிரதிநிதிகள் பி. தரணி, பா.சந்திரன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எஸ். கருணாகரன், வட்ட கழக நிர்வாகிகள் நிர்வாகிகள் துணை செயலாளர் வக்கீல் வெங்கடேசன், என். பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ் குமார், பகுதி பிரதிநிதிகள் சி. முத்தையா, கே. ராஜ்மோகன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், டோமினி பிரான்சிஸ் தேவராஜ், பாக முகவர் நித்தியானந்தம், வெங கட்ராமன், செமின்எடிசன், செபின் எடிசன் உள்ளிட்ட பலர் முன்னிலை வகித்தனர்.

கழக ஆக்கப் பணிகள், தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி தீவிர உறுப்பினர் சேர்க்கை, வீடு வீடாக திண்ணை பிரச்சாரம் செய்தல் மற்றும் வருகின்ற ஜூலை மாதம் 16 வது வட்டத்தில் நடைபெறுகின்ற பொதுக்கூட்டம் ஆகியவை குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் 16வது வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் நலப்பணிகள் மற்றும் கழகப் பணிகளை தொடர்ந்து கண் காணித்து, 2026 ஆம் ஆண்டு மீண்டும் திராவிட மாடல் ஆட்சி முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கொண்டு வர அயராவது பாடுபடுவது மற்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இறுதியாக என். பரசுராமன் நன்றி கூறினார்.

பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் கழக நிர்வாகிகளுக்கு தங்க மோதிரம் அணிவிப்பு!

## டி.ஆர்.பாலு எம்.பி.- ஆ.ராசா எம்.பி. - அமைச்சர் தா.மோ. அன்பரசன் அணிவித்தார்கள்!

பல்லாவரம் ஜூன் 28

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி வாக்குச் சாவடி நிலை முகவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று (27-6-2025) காலை 11.00 மணி அளவில் பல்லாவரம் 200 அடி சாலையில் சரவணா செல்வரத்தினம் ஸ்டோர்ஸ் அருகில் உள்ள கலைஞர் திடலில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் மண்டல தலைவருமான வே. கருணாநிதி பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவருமான இ.ஜோசப் அண்ணாதுரை பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் த. ஜெயக்குமார் செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர் ஜி. கே.ரவி ஆகியோர் முன்னிலையில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது.

இவ்ஆலோசனைக் கூட்டத்தில் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மண்டல தேர்தல் பணிகள் பொறுப்பாளர் நாடாளு மன்ற உறுப்பினர் ஆர். ராசா கழக நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் கழகப் பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு

கூட்டத்தில் பங்கேற்ற வாக்குச்சாவடி நிலை முகவர்களை ஆய்வு செய்து அவர்களிடம் களப்பணியில் உள்ளீர்களா உங்களுடன் தேர்தல் பணி உறுப்பினர்கள் பணியாற்றுகிறார்களா உட்பட பல் வேறு தேர்தல் பணியை குறித்த சந்தேகங்களை கேட்டறிந்தனர்.

அதைத்தொடர்ந்து வருகிற சட்டமன்றத் தேர்தலில் தேர்தல் களத்தில் எவ்வாறு பணியாற்றுவது என்பதை குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள்.

மேலும் கழகத் தீர்மானக் குழு செயலாளர் மீ. அ. வைத்தியலிங்கம் தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ். ஆர். ராஜா பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ரபி அகமது தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ் தொமுச இரா. பொன்ராம் மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர்கள் அ.தமிழ்மாறன் என். நவீன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

முன்னதாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது அதிக வாக்குகளைப் பெற்றுத் தரும் வட்டக் கழகசெயலாளர்கள், பகுதி கழக செயலாளர்களுக்கு கணையாழி (தங்க மோதிரம்) அணிவிக்கப்படும் என கடந்த நாடாளுமன்ற தேர்தலில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் அறிவித்திருந்தார் அதன்படி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற நமது டி. ஆர். பாலு எம்.பி அவர்களுக்கு பல்லாவரம். சட்டமன்ற தொகுதியில் 86 ஆயிரம் வாக்குகள் அதிகம் கிடைத்திருந்தன.

அதற்கு இணங்க இன்று சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி ஏற்பாட்டில் பகுதி கழகச் செயலாளர்கள் வே. கருணாநிதி இ.ஜோசப் அண்ணாதுரை த. ஜெயக்குமார் இ.எஸ். பெர்னார்ட் ஏ. கே. கருணாகரன் ஒன்றிய செயலாளர் ஜி. கே. ரவி மற்றும் வட்ட கழகங்களில் முதல் மூன்று இடங்களை பிடித்த வட்டக் கழக செயலாளரகள் அப்பாஸ், டி.எச். பிரான்சிஸ் பால், சாலாஎன்கிற சுகுமார் ஆகியோர்களுக்கு ஆ.ராசா டி. ஆர. பாலு தா.மோ. அன்பரசன் ஆகியோர்கள் சால்வை அணிவித்து ஒரு சவரத்தில் தங்க மோதிரம் அணிவித்து கௌரவித்தார்கள்.

கூட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள 442 வாக்குச்சாவடிகளில் நியமனம் செய்யப்பட்ட வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA2) உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டார்கள் இக்கூட்டத்தில் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் நன்றி உரை கூறினார் இக்கூட்டத்திற்கு பல்லாவரம் சட்டமன்ற தொகுதி சார்பாக அழைப்பு விடுக்க ப்பட்டிருந்தது ஆலோசனைக் கூட்டம் ஒரு மாநாடு போல் மிகப் பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றது.

